# திருக்காளத்தி இஷ்டகாமிய மாலை



SRI KALAHASTISWARASWAMYVARU
KALAHASTI (A.P.)



இதனை தொடர்ந்து இத்திருத்தலத்தில் சிறப்பு வழிபாடும், தல பெருமை போன்ற சிறப்புமிக்க நூல்கள் தொடர்ந்து வெளியிட உள்ளோம். தங்களின் மேலான ஆதரவை தந்து எங்களை ஊக்கமளிக்க வேண்டுகிறோம்.

பரத்வாஜ ஆஸ்ரமம்
திருக்காளத்தி

FOR COPY

**Dr. S.M.K.A. GURUKAL**
4-570, CAR STREET,
SRI KALAHASTI

மாத்ரு தேவோ பவா



திருமதி. [லேட்] S.M.K. ஈஸான ஸிவா

அவர்களுக்கு சமர்ப்பனம்.

# முகவுரை

நால்வர் முக்தி அடைந்த க்ஷேத்திரம் (சிலந்தி, பாம்பு, யானை மற்றும் கண்ணப்பர்) நால்வரால் பாடல் பற்றிய க்ஷேத்திரம் கைலேயில் பாதி காலத்தில் பாதி என்று புகழ்பெற்ற க்ஷேத்திரம்.

(நக்கீரர்)

திருகாளத்தியில் சிவபெருமான் பஞ்ச பூதங்களில் வாயு சொருபமாகி தோன்றியுள்ளார். இத்தலம் தென்கயிலை சிவானந்த தைக நிலையம் விஞ்ஞான க்ஷேத்திரம் சத்திய விருந்த பாஸ்கர க்ஷேத்திரம் என்ற பெருமை வாய்ந்த கிரி தீர்த்தம் என்று தல வரலாறு சொல்லி இருக்கிறார்கள்.

இத்தல வரலாற்றில் காளத்தி நாதன் பற்றி

பட்சி மாபி முகலிங்கம்
கர் பூரகா கிரிதா தோபிதம்
கர்கிர்த் தட்ண மாக்கே நானா
கோடி ஜென்மோ பாபநாசனம்

தெற்கு நோக்கி அமர்ந்திருக்கும் கர்பூரம் போல் வெண்மையாக இருக்கும் சாமியை பார்த்த உடனே கோடி ஜென்மங்கள் செய்த பாபம் நீங்கும், காளத்தி அப்பரை வழிபட வரும் பக்தர்களுக்கு பிறவிப்பிணிகள் விடுபடும்.

பாரத்வாஜ ஆஸ்ரமத்தினரால் இத்திருக்கோயிலில் வந்து வழிபடும் பக்தர்கள் பயன்பெறுவதை கருதி திருகாளத்தி இட்ட மாலை வெளியிடப்படுகிறது.

இங்ஙனம்
**ஸ்தளபதி ஈஸான சிவகுரு**
**பாரத்வாஜ ஆஸ்ரமம்**
திருகாளத்தி

இதனை தினந்தோறும் பாராயணம் செய்து வந்தால் எல்லாதோஷங்கள் நீங்கி சகல சௌபாக்யங்களும் பெறுவர் என்பது திண்ணம்.

இந்நூலை வெளியிட உதவிய திரு. ச. திருநாவுக்கரசு மற்றும் திருமதி. A. பரமேஸ்வரி அவர்களுக்கு எங்களது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

# திருக்காளத்தி இஷ்டகாமிய மாலை

## காப்பு

(நேரிசை வெண்பா)

தேமிகுகா ளத்திச் சிவக்கொழுந்தைப் போற்றுமிட்ட
காமிய மாலைக் கவித்துறைக்கு - நேமிபுகழ்
தாளத் தடைவுகொள்பா தாளக் கணபதிதாள்
மேளத் துடன்றுணையா மே.

இனிமையும், தெய்வத்தன்மையும் நிறைந்த திருக்காளத்தி நாதராம் மலைக்கொழுந்தைப் போற்றிப் புகழ்ந்து பாடுகின்ற 'திருக்காளத்தி இட்டகாமிய மாலை' என்ற கலித்துறை நூல் நிறைவேறுதற்கு, உலகு புகழ் சிறப்பு கொண்ட, நடனமிடும் போது தாளத்திற்கேற்றபடி அடைவை மேற்கொள்ளும் திருவடியினை உடைய பாதாளக் கணபதியின் திருவடிகளை மேள வாத்தியத்துடன் துணையாகக் கொள்வோம்.

## நூல்

(கட்டளைக் கலித்துறை)

திருமான் மலரயன் நேடுமெம் மானன்பர் தேக்கவின்பம்
தருமா நடம்புரி பெம்மான் கயிலைத் தலத்தன்றக்கன்
மருமான்வில் வேடர்தங் கோமா னிடுங்கண் வலையிற்சிக்கும்
பெருமானிடத்திற் சிறுமானெ ரானையைப் பெற்றதுவே.

திருமாலாலும், பிரம்மதேவனாலும் அடிமுடி தேடப்பட்ட பெருமை மிக்கவன். அன்பர் இன்பத்தைப் பெறும்படியாகப் பரமானந்த தாண்டவமாடியவன். தென் கயிலாயமாகிய திருக்காளத்தியில் எழுந்தருளி இருக்கும் ஈசன், தட்சனின் மருமகன், கண்ணப்ப நாயனாரின் கண்ணாகிய வலையிலே சிக்கிய, பெரிய மானாகிய சிவபெருமானின் இடப்பாகத்தே உறையும் சிறிய மான் போன்ற உமாதேவியார், ஆனை முகத்தினை உடைய விநாயகரைப் பெற்றார்.

தமரக் கடலைக் கடைந்த முகுந்தன் தனக்குமெய்க்கே
பமரக்கண்ணுயிரத் தாற்குமெட்டாது பனிக்கதிர்வேற்
குமரக் கடம்பன்முன் னத்தியை யீன்ற கொடியையுங்கொண்
டமரர்க் கரசொரு கல்லா லடியி லமர்ந்ததுவே.

பெரு முழக்கத்தினையுடைய கடலைக் கடந்த முகுந்தனாகிய திருமால் தனக்கும், ஆயிரம் கண்களை உடைய, இந்திரனுக்கும் புலப்படாத, குளிர்ச்சி பொருந்திய கிரணங்களையுடை,பகைவரும் நடுங்கும் வேலாயுதத்தினையுடைய, கடம்ப மாலையை அணிந்த முருகக் கடவுளுக்கு முன்பாக யானை முகத்தோனை ஈன்ற உமாதேவியை இடப்பாகத்துக் கொண்டவனும், தேவர்கள் தலைவனுமான சிவபெருமான் திருக்காளத்தி மலையில் ஆலமரத்தடியில் எழுந்தருளியுள்ளார்.

தருமந் தவஞ்சற் றறியாத வேடுவன் றன்செருப்பு
மருமுந்து வேணிக் கணிமா மலரவன் வாயுதகத்
திருமஞ் சனக்குடம் பல்லா லவன்மென்று தின்றதசை
அருமந்த போனக மன்றேநங் காளத்தி யப்பருக்கே

தருமம், தவம் இவை பற்றிச் சிறிதும் அறியாத வேட்டுவக் குலத்துதித்த கண்ணப்ப நாயனார், வாயால் கொணர்ந்த நீரால் திருமஞ்சன நீராட்டி தன் தலையிலணிந்து கொணர்ந்த மணமிக்க மலரால் அர்ச்சித்து, தனது பற்களால் மென்று சுவை பார்த்த இறைச்சியைப் படைத்தருளினார். அது திருக்காளத்தி நாதருக்குத் தேவாமிர்தம் போன்ற இனிய உணவாகும்.

ஆகாச மாநட்ட மாடீ பரிந்துமை யாளுறைந்த
பாகா செகத்திற் பிறவாம லுக்குன் பதந்தருவாய்
வாகா தவரு மாற்றமால் யானை வதைத்தன்றேல்
ஏகாச் மிட்ட சொருபாதென் காளத்தி யீச்சுரனே.

சிதாகாசத்தில் பரமானந்த தாண்டவம் செய்தருள்வோனே! உமாதேவி விரும்பி இருக்கும்படியான ஒரு பாகத்தை உடையவனே! அழகு மிக்கவனே! இந்திரியங்களாகிய யானைகளை வென்ற, தவத்தையுடைய முனிவர்களும் அலறி ஓடும்படி, தாருகாவனத்து முனிவரால் ஏவப்பட்ட யானையினை வதம் செய்து, முனிவர்களை காத்தவனே! அந்த யானையின் தோலை மேற்போர்வையாகக் கொண்ட அழகிய உருவத்தை -யுடையவனே! திருக்காளத்தியில் வாழும் ஈசனே! இந்த உலகத்தில் மீண்டும் பிறவாமல் இருக்க, உன் திருவடிகளை அடையும் பேற்றினைத் தருவாய்.

மச்சிட்ட வீடு சுடலைபன் மாலை மலரவன்கம்
நச்சிட்ட மாகிய கற்பம்வெம் பேய்படை நன்றுதின்ற
உச்சிட்டம் போனக மென்பா பரண முடைபுலித்தோல்
அச்சிட்டர் போற்றங் கயிலையிற் காளத்தியப்பருக்கே.

சிவகோசரியார் போன்ற சித்தர்களால் போற்றப்படும் திருக் காளத்தியப்பரே! உமக்கு மேல்மாடத்துடன் கூடிய வீடு சுடுகாடாகும்; உமக்குரிய மாலை, கர்ப்பம் தோறும் தோன்றி -யழியும் பிரம்மாக்களின் கபாலஓடுகளாகும்; நீ விரும்பி உண்ணும் காயகல்பம், பாற்கடலில் தோன்றிய நஞ்சாகும்; உமக்குரிய படைகள் பேய்க் கணங்களாகும்; நீ விரும்பி உண்ணும் உணவு, கண்ணப்பன் மென்று தின்ற எச்சிலாகும்; உமக்குரிய அணிகலன்கள் எலும்புகளாகும்; நீ அணியும் ஆடையோ, புலித்தோல் ஆகும்.

அணியேன்வெண் ணீறு துதியேனின் னாமமெய் யன்பினுன்றாள்
பணியேனின் றொண்ட ருடனணு கேன்பெரும் பாவஞ்செய்த
திணியேன் றவமிலி யானலுங் காத்தரு டெய்வசிகா
மணியே சிவக்கொழுந் தேகயி லாய மலைக்கொழுந்தே.

தெய்வங்களில் தலைமையானவனே! சிவக்கொழுந்தே! திருக்காளத்தியாகிய கயிலாய மலைக் கொழுந்தே! நான் திருநீற்றினை அணியாமலும், உனது நாமத்தை உச்சரித்து உனை வணங்காமலும், உண்மை அன்புடன் உனது திருவடியினைப் பணியாமலும், உனது சிவனடியார்களுடன் நெருங்கிப் பழகாமலும் பல்வேறு பாவங்களைச் செய்த மனவன்மையையுடையவன். மேலான தவத்தைச் செய்தவனுமல்லன். ஆனாலும் நீ என்னைக் காத்தருள வேண்டும்.

போதுசெய் வேன்மனம் புன்மைசெய் வேனம்பிப் போந்தவர்க்குச்
சூதுசெய் வேனுந்தி தான்வளர்க் கைக்குத் தொடங்கிப்பல
தீதுசெய் வேனென் பெரும்பாவந் தானின்று தீருகைக்கிங்
கேதுசெய் வேனிறை வாதிருக் காளத்தி யீச்சுரனே.

திருக்காளத்தி நாதனே! ஈசனே! நான் நினை எண்ணிப் பணிதல் முதலிய செயல்களைச் செய்யாமல் வீணாகப் பொழுதைக் கழிக்கின்றேன். மனதிலே வேண்டாத தீய எண்ணங்களை எண்ணுகின்றேன்; எனை முழுவதும் நம்பி வந்தவர்க்கு வஞ்சகம் செய்கின்றேன்; வயிற்றினை வளர்க்கப் பல்வேறு தீய காரியங்களைச் செய்கின்றேன். இத்தகைய மாபெரும் பாவங் -களிலிருந்து நீங்கி வாழ்வதற்கு நான் இனி என்ன செய்வேன்.

அங்கணத் தாரெழுந்த தற்புதத் தாமரை யாதரிப்போர்
வங்கணத் தாலெனை யஞ்சலென் பாய்மத னைச்செயித்த
செங்கணத் தாரத்ன மிட்டிமை யாநிற்குஞ் சித்ரபணிக்
கங்கணத் தாய்பொன் முகரிக்கல் லாலடிக் காளத்தியே.

மன்மதனை எரித்த நெற்றிக்கண்ணை உடையவனே! மாணிக்கக்கல் விளங்குகின்ற, பாம்பினைக் கழுத்திலே அணியாகக் கொண்டிலங்குபவனே! பொன்முகரி என்னும் ஆறு ஓடுகின்ற, திருக்காளத்தி மலையிலே, ஆலமரத்தடியிலே எருந்தருளியுள்ள, திருக்காளத்தி எனும் பெயர் உடைய இறைவனே! 'ஞான வாசனையுடைய திருவடியாகிய தாமரையினை வழிபடுகின்ற அழகிய சிவனடியார் கூட்டத்தின் நட்பு உள்ளமையால், வேறு குணம் எனக்கு இல்லாதிருப்பினும் என்னை அஞ்சலெனக் கூறி, ஆறுதல் அளிப்பாயாக!

பெருக்க மலக்குடி லைப்பேணி யேயுழல் பித்தனென்கை
சுருக்க மனம்பெறுத் தானலு மென்மிடி தூளெழப்பார்
மருக்கம ல்த்துறை வேதற்கெட் டாத வடிவினனே
எருக்க மலர்ச்சடை யாய்திருக் காளத்தி யீச்சுரனே

மிகுந்த நறுமணமுடைய தாமரை மலரிலே வாழ்கின்ற பிரமனாலும் கண்டறிய முடியாத வடிவத்தை கொண்டவனே! எருக்க மலரினைச் சடையிலே அணிந்தவனே! திருக்காளத்தி எனும் நாமமுடைய ஈசனே! உருவத்தில் பெரிதாகும்படி, அழுக்கு நிறைந்த குடிசை போன்ற உடலினை பாதுகாப்பதிலேயே மனம் ஒன்றி உழல்கின்ற எனதுடல் நன்கு வற்றும்படியும், எனது வறுமை ஒழியும்படியும் அருள்வாய்!

பெண்ணப்பன் வேள்வி தனிலே யுகந்து பெருகப்பிடித்
துண்ணப் புகுந்த சுரரையெல் லாந்துரந் தோடச்செய்தாய்
விண்ணப்ப மொன்றுண்டு கேளடி யேன்மெய்ப் பிணிகளைவாய்
கண்ணப்பனெச்சிலுகந்தவ னேதிருக் காளத்தியே

தாட்சாயணியின் தந்தையும், உனது மாமனும் ஆகிய தக்கன் வளர்த்த வேள்வியிலே மகிழ்ந்து, அவிர்பாகம் தனை மிக விரும்பி உண்ணத் துவங்கிய தேவர்களை எல்லாம் அவ்வுணவினை விட்டு விட்டு ஓடும்படிச் செய்தவனே! கண்ணப்பன் எனும் வேடன் தந்த எச்சிலுணவை விரும்பி உண்ட இறைவனே! திருக்காளத்தியில் உறையும் ஈசனே! உன்னிடம் நான் வைக்கும் வேண்டுகோளினைக் கேட்பாயாக; எனது துன்பங்களை போக்குவாயாக.

துறைவாரி நஞ்சண்ட கோளத்தை முட்டத் தொடங்கியநாள்
நிறைவா னவர்களுந் தாமிற வாமன்முன் னின்றது போற்
பிறைவார் சடைமுடிப் பிஞ்ஞக னேயேன் பிணிதொலைப்பாய்
இறைவா வுனைநம்பி னேன்றிருக் காளத்தி யீச்சுரனே

தேவர்கள் பாற்கடலைக் கடைந்த பொழுது தோன்றிய ஆலகால நஞ்சினைக் கண்டு பயப்பட, அத்தேவர்கள் உய்யும் படியாக நஞ்சினையெல்லாம் உண்டு, கண்டம் கருத்து நின்ற நீலகண்டனே! சடா முடியிலே பிறைச் சந்திரனை அணிந்து கொண்ட இறைவனே! திருக்காளத்தி மலையில் வீற்றிருக்கும் ஈச்வரனே! உன்னையே நம்பியிருக்கும் எனது துன்பத்தைப் போக்கியருள்வாய்.

பாலிலுண் டான சுவைமட்சி நஞ்சம் பரந்ததுபோல்
வாலிப ரூபஞ்சிங்க காரத்தின் றீமை மயக்கிடவென்
மேலினில் வந்திடும் பொல்லாப் பிணிதனின் மீட்டருள்வாய்
சேலுகள் வாவி செறிகயி லாயச் சிவக்கொழுந்தே

மீன்கள் பாய்ந்து திரிகின்ற வாவிகள் நிறைந்த கயிலாயத்தில் விளங்குகின்ற சிவக்கொழுந்தே! பாலின் இன்சுவை கெடுமாறு, நஞ்சு கலந்தது போல், இளைய மகளிரின் அழகிய உருவத்தின்மேல் கொண்ட மயக்கத்தினால் எனதுடலிலே வந்து, எனை வருத்தும் தீமை நிறைந்த நோயினின்றும் எனைக் காத்தருள்வாயாக.

நெருப்புக் குகையைப் புழுமொய்க்கு மோவிந்த நீணிலமேல்
இருப்புக் கபாடத்தைச் செல்லெய்து மோவிமை யோர்க்கரசே
விருப்புற்றுன் றாளைத் தியானித்த பேர்க்கு மிடிவருகுமா
செருப்புச் சடையண்ண லேகயி லாயச் சிவக்கொழுந்தே

கண்ணப்பனென்னும் வேடனின் செருப்பணிந்த கால்களால் பூஜிக்கப்பட்ட அண்ணலே! கயிலாயத்தில் விளங்குகின்ற சிவக் கொழுந்தே! உலோகங்களை உருக்குவதற்கு நெருப்பினுள்ளே வைக்கப்படும் கருவியைப் புழு மொய்க்குமா? இந்த நீண்ட நிலவுல-கத்திலே இரும்பினாலான கதவினைக் கறையான் அரித்திடுமா? தேவர்களுக்கெல்லாம் வேந்தனே? மிகுந்த ஆர்வத்துடன் உனது திருவடிகளைத் தொழுதவர்க்கு வறுமையும் வருமோ!

நொச்சியுங் கொன்றையுஞ் சூழ்சடை யாயென்னை நோவுசெய்யும்
மெய்ச்சிலு கான பிணிதொலைப் பாயன்று வேடனிட்ட
எச்சிலுந் தின்று பசியுங் கெடாம லிருந்தென்மனக்
குச்சி லுறைபவ னேகயி லாயச் சிவக்கொழுந்தே

நொச்சிப் பூவினையும், கொன்றைப் பூவினையும் தலையிலே சூடிய இறைவனே! அன்று வேடன் கண்ணப்பன் இட்ட எச்சிலுணவினை உண்டு பசியாறியவனும், எனதுள்ள வீட்டினிலுறைபவனுமான சிவனே! கயிலாயத்து வாழ்கின்ற சிவக்கொழுந்தே! என்னைத் துன்புறுத்துகின்ற, உடலிலே பற்பல இடர் விளைவிக்கின்ற நோயினை நீக்குவாயாக.

விந்தை வியாகுலந் தந்தடி யேன்மெய்யிற் றீங்குசெய்யும்
இந்த வியாதி தனைக்களை வாயியற் சுந்தரனு
கந்தவி யாமற் பரவைக்குத் தூதுசெல் காரணனே
தந்த வியாளப் பணியாய்கை லாயச் சதாசிவனே

சுந்தரமூர்த்தி நாயனாரின் மனம் கலக்கமுறாதபடி, பரவை நாச்சியாரிடம் தூதுவனாகச் சென்றவனே! பாம்பாகிய ஆபரணத்தினைக் கழுத்திலே உடையவனே! கைலாயத்து வாழும் சதாசிவம் எனும் நாமமுடைய இறைவனே! மனதிலே சஞ்சலத்தினை உண்டாக்கி, எனது உடலினைத் துன்புறுத்தும் இந்த வியாதியினை நீக்குவாயாக.

எலிதான் கலக்கண்ணி னீர்களிற் பூனை யிரங்குமதோ
கிலிதான் பிடித்து மனமே தியங்கிப்பற் கெஞ்சியிட்டால்
வலிதாய பாவம் விடுமோதென் காளத்தி வானவனம்
புலிதாழ் சடையன் கடாட்சமுண் டாயிடிற் போய்விடுமே

எலியானது கலங்கலமாய்க் கண்ணீர் விட்டழுதாலும் பூனையானது மனமிரங்கி விட்டு விடுமா? பயமானது அதிகரிக்க மனங்கலங்கி பலவாறு வருந்தி நின்றாலும் நாம் செய்த கொடிய பாவமானது நம்மை விட்டு விலகிவிடுமா? தென் கயிலாயம் எனப்படும் திருக்காளத்தி மலையிலே எழுந்தருளியுள்ள இறைவனும், பிறைச்சந்திரனைச் சடாமுடியிலே தரித்தவனுமான சிவபெருமானின் அருட்பார்வை கிட்டுமாயின் எப்பாவமும் போய் விடும்.

மேலடி வைக்குஞ் சினமாறன் றன்சுர மீட்டகதை
போலடியேன்மெய்ப் பிணிகளை வாயண்டர் போற்றநெடு
மாலடி தேடி வயன்முடி தேட மறைந்தொருகல்
லாலடி தேடி யமர்தரு காளத்தி யாண்டவனே

தேவர்களும் போற்றி பாராட்டும் சிறப்புமிக்க அடிமுடி தேடிய திருமால், பிரமனின் கண்களுக்கும் புலப்படாது மறைந்த இறைவனே! ஆலமரத்தின் அடியிலே அமர்ந்த திருக்காளத்தி நாதரே! நீர், பிரம்பாலடித்த அரிமர்த்தன பாண்டியனுக்கு காட்சி தந்து அருள் புரிந்ததைப் போல, அடியேன் என்து உடற்பிணியினை போக்குவாயாக.

கோழைச் சவலை யடியேனைக் காத்தருள் குற்றமிலா
மாழைச் சயிலத் தனுவுடை யாயுன்னை வாழ்த்தப்பொரு
மோழைச் சமணைக் கழுவேற் றினுற்கு முலைகொடுத்த
ஏழைச்சி பங்கின னேதிருக் காளத்தி யீச்சுரனே

ஒரு சிறிதும் குற்றமில்லாத பொன்மலையாகிய வில்லனை உடைய கடவுளே! அடியார் உனை வாழ்த்திப் பாடுவதைப் பொறுத்துக் கொள்ள இயலாத, அறிவில்லாத சமணர்களைக் கழுமரமேற்றிய திருஞானசம்பந்தருக்குக் குழவிப் பருவத்தில் உமை மூலம் பாலமுதம் தந்தவனே! திருக்காளத்தியில் வாழும் இறைவனே! ஈச்வரனே! பயமுடையவனும், ஆதரவு அற்றவனுமாகிய என்னைக் காத்தருள்வாயாக!

நாவுக் குருசி தனைத்தேடிப் பல்லுயிர் நாடியந்த
ஆவுக்குத் தீங்குசெய் யும்பஞ்ச பாதக னென்றனைக்
கோவித்துக் கீழ்நர கிற்படுத் தாமற் குறித்தருள்வாய்
காவித் தடவயல் சூழ்கயி லாபுரிக் காளத்தியே

இறைவனே! பசுமை நிறைந்த வயல்களால் சூழப்பட்ட வளமிக்க கயிலாயமாம் திருக்காளத்தியில் உறையும் ஈசனே! நாவிற்குச் சுவை தேடி, பல்வேறு உயிர்களுக்குத் தீங்கு செய்கின்ற மிகக் கொடிய பாவியாகிய எனைக் கீழுலகமான நரகத்தில் கொண்டு செலுத்தாமல் காத்து அருள்புரிவாயாக!

மாரக் கடம்பனைப் பெற்றகண் ணுவனே வாழ்த்துமென்மேற்
கோரப் பிணிகெடப் பார்த்தருள் வாய்நின்சொற் குற்றமென்ற
கீரற்கு நின்சொரு பங்காட்ட வேண்டிக் கிளைத்தெழுந்த
ஈரச்சடாமுடி யாய்திருக் காளத்தி யீச்சுரனே

மன்மதனையொத்த அழகிய உருவமுடைய முருகக் கடவுளை விழிப்பொறியிலிருந்து பெற்றெடுத்த இறைவனே! தருமியின் பொருட்டு நீ பாடிய செய்யுளில் பொருட்குற்றம் உடையதெனக் கூறிய நக்கீரருக்கு உனது உருவத்தைக் காட்ட வேண்டிச் சடைமுடியுடன் தோன்றிய திருக்காளத்தி உறை இறைவனே! ஈச்வரனே! உன்னை வாழ்த்திப் பாடும் என்மீது படிந்துள்ள கொடுமையான நோயினை இல்லையெனும்படி நீங்கிடச் செய்தருள்வாய்.

நின்பணி தன்னின் மூயலேனின் னுமை நினைத்தருள்வார்
முன்பணி யேன்றிரு நீறணே யேன்வஞ்ச மூர்க்கனியான்
மின்பணி தொண்டர் தலைமண்டை கொண்டது மீட்டதுபோல்
என்பிணி யைக்களை வாய்திருக் காளத்தி யீச்சுரனே

திருக்காளத்தி ஈச்வரனே! நினை வணங்குதல், வாழ்த்துதல், பணிதல் முதலான பணி செய்ய முயல மாட்டேன்; உன் திருநாமம் தனை நினைப்பவர் முன் பணிந்து வணங்க மாட்டேன்; திருநீற்றினை நெற்றியில் பூச மாட்டேன். இத்தகைய கொடுங் குணமுடைய எனது தீராத பிணியினை நீக்கி, எனைக் காத்தருள்வாய்!

வீணுந் தகைமையு மேம்பாடுங் கற்று மிகவுழன்று
சாணுந்தி பேணித் திரிதனன் ரேசெஞ் சடாமுடியும்
பூணுமுந் நூலுந் திருமார்புந் தூக்கிய பொற்பதமும்
காணும் பதந்தரு வாய்கயிலாபுரிக் காளத்தியே

கயிலாயநகர் வாழும் காளத்தி இறைவனே! பயனற்ற செயல்களையும், தகுதியுடைய மேன்மையான செயல்களையும், ஒன்றாகவே கற்று மிகவும் துயர் அடைந்தேன். அன்றியும் சாணளவு வயிற்றினை வளர்க்கும் பொருட்டு இவ்வுலகத்தில் வாழ்ந்தேன். உனது சிவந்த சடாமுடியினையும், பூணூல் அணிந்த மார்பினையும், தூக்கிய பொற்பாதத்தினையும் காண்கின்ற பெரும்பேற்றை எனக்கு நீ தந்தருள்வாயாக!

தூற்று மருந்தும்பொய் சோலை மருந்தும்பொய் சூழ்கடலில்
ஏற்று மருந்தும்பொய் மானிடர் காளஞ் செழுத்தையன்பாற்
சாற்றுமருந்தவ மில்லாத வன்மெய் தனிற்பிணியை
மாற்று மருந்துதென் கைலாய மேய மலைமருந்தே.

தென் கயிலாயமாம் திருக்காளத்தியிலே தங்கி வாழும் இறையாம் மலை மருந்தே! மரத்தின் பட்டைகளிலிருந்தும், வேர்களிலிருந்தும் உண்டாகும் மருந்தும், சோலையில் வளரும் பல்வேறு வகையான மூலிகைகளின் மருந்தும். கடலிலிருந்து தோன்றும் அமுதமும் நிலைத்த தன்மையுடைன அல்ல 'நமசிவாய' எனும் ஐந்து எழுத்தே மக்கள் உடலிலே தோன்றுகின்ற உடற்பிணியை மாற்றுகின்ற அரிய மருந்தாகும்.

பணிக்கு மருந்து கருட னலாதில்லை பாரிலிருள்
அணிக்கு மருந்து தவனன லாதில்லை யானபசி
தணிக்கு மருந்தன்ன தானமல் லாதில்லை சாற்றுகிலென்
பிணிக்கு மருந்து கயிலாய ரன்றிப் பிறரில்லையே

கொடிய நஞ்சுடைய நாகத்திற்குப் பரிகாரம் கருடனே அல்லாது பிறிதொன்றில்லை. இவ்வுலகத்தைச் சூழும் இருளுக்குப் பரிகாரம் சூரியனன்றி வேறில்லை. மனிதனுக்குத் தோன்றும் கொடிய பசிக்கு, மருந்து அன்னதானமின்றி வேறில்லை. அதுபோல் எனது நோய்க்கு மருந்து யாதெனக் கேட்டால், கயிலாயத்து வாழும் இறைவன் திருக்காளத்தியப்பரன்றி பிறரில்லை

நெஞ்சடை யாமுன் னினைவழி யாமுன் னெடும்புலன்கள்
அஞ்சடை யாமுன் னறிவழி யாமு னயர்ந்துகண்கள்
பஞ்சடை யாமுன் னடியேனைக் காத்துன் பதந்தருவாய்
செஞ்சடை யாய்பர மாகயி லாயச் சிவக்கொழுந்தே

சிவந்த சடாமுடியினை உடையவனே! பரமனே! கயிலாயத்துதித்த சிவக்கொழுந்தே! கபத்தினால் தொண்டை அடைத்துக் கொள்ளும் முன்பாக எனது நினைவாற்றல் அழிவதற்கு முன்பாக நீண்ட நெடுங்காலமாக நல்லமுறையில் இயங்கிய ஐம்பொறிகளும் அடைப்பதற்கு முன்பாக, எனது அறிவு செயலற்றுப் போவதற்கு முன்பாக, எனது கண்கள் பஞ்சடைத்து, ஒளி மழுங்குவதற்கு முன்பாக, நீ எனக்கு உன் திருவடியில் அடைக்கலம் தந்து காத்தருள்வாய்!

தீக்கிரை யாயெறும் புக்கிரை யாய்மண் டின்றக்கிரையாய்
நாய்க்கிரை யாய்வன் னரிக்கிரை யாயுட லுன்சுமந்தேன்
வாய்க்கிரை தேடி வருந்தாம லாண்மன் மதனையுங்கட்
டீக்கிரை யாக்கிய தேவே கயிலைச் சிவக்கொழுந்தே

மன்மதனை உனது நெற்றிக் கண்ணால் சுட்டு, தீக்கிரையாக்கிய தேவனே! கயிலையில் உறையும் சிவக்கொழுந்தே! தீயினுக்கும், எறும்புக்கும், மண்ணுக்கும், நாய்க்கும், தந்திரமிக்க நரிக்கும் உணவாகக் கூடிய இந்த உடலை நான் இத்தனை நாள்களும் வீணாகச் சுமந்தேன். வாய்க்கிரையாம் நல்லன தரும் உனது நாமத்தினை உச்சரிக்காமல் அலட்சியம் செய்தேன். என்னைக் காத்தருள்வாய்.

குச்சித்த னன்னெறி யில்லாத வன்வெய்ய கோபனின்பால்
மெய்ச்சித்த மற்றவனுனலுங் காத்தருள் வேதப்பிரான்
உச்சித் தலைகொய் தவனே கண்ணப்ப னுமிழ்ந்ததசை
இச்சித் தமுதுசெய் தோனேதென் காளத்தி யீச்சுரனே

பிரம்மாவின் நடுத்தலையினைக் கொய்தவனே! கண்ணப்பனின் எச்சில் உணவை விரும்பி உண்டவனே! தென்காளத்தி ஈச்வரனே இழிந்த எண்ணங்களை உடையவனும், மிகுந்த கோபக் குணம் உடையவனும், உன்னிடம் உண்மையான பக்தி இல்லாதவனுமாகிய என்னைக் காத்தருள்வாய்!

நேர்ந்தாரை வாழ்வித்து நேராரைத் தாழ்விக்கு நின்மலனே
பூந்தாரை யிந்து முடித்தவ னேயுனைப் போற்றிவந்து
சேர்ந்தேனை வாழ்வித்தென் மெய்யிற் பிணிதனைத் தீர்த்தருள்வாய்
சார்ந்தாரைக் காப்பவ னேகயி லாபுரிச் சங்கரனே

உன்பால் வந்து சேர்ந்தவரைக் காக்கும் சிவனே! கயிலை மலையில் வாழ் சங்கரனே! தன்பால் அன்பு பூண்டவரை வாழ வைத்து, பகைவரைத் தாழ்விக்கும் தூயவனே! பொலிவுமிக்க நட்சத்திரங்களையுடைய சந்திரனைச் சடாமுடியில் அணிந்தவனே உன் புகழைப் பாடிவந்து உன் திருவடியில் சேர்ந்த என்னை வாழச்செய்து, எனது உடலில் உள்ள நோயைத் தீர்த்திடுவாயாக.

அப்புரத் தத்தசை யென்பாற் சமைத்தவென் னுகத்துற்ற
துப்புரத் தைக்குலைக் கும்பிணி தீர்த்தருள் சோபனனீ
செய்புரத் திற்பெண் ணழுத்துங்க கணையுஞ் சிலையுங்கொண்டு
முப்புரத் தைச்செற்ற காளத்தி யீச முழுமுதலே

திவ்ய மங்கள மூர்த்தியே! புகழ்மிக்க திருமார்பில் திருமகளைப் பதித்த திருமாலாகிய அம்பையும், மேருமலையாகிய வில்லையும் ஒடியும்படிச் செய்த முழு முதற்கடவுளே! காளத்தி ஈசனே! நீரின் அம்சமாகிய இரத்தம், தசை, எலும்பு என்றிவற்றால் உருவாக்கிய உடம்பின் தூய்மையையும், வன்மையையும் குலைக்கின்ற நோயினைத் தீர்த்தருள்வாயாக!

நாகரை யாகத்திற் பூண்டவ னேயந்த நாட்புரத்தைச்
சேகரை யாடலிற் செற்றவ னேமலர்த் தேமுதலாம்
மாகரை யாளும் பரனேயென் மெய்ப்பிணி மாற்றிவலி
யேகரை யாமல்வைப் பாய்திருக் காளத்தி யீச்சுரனே

நாகப் பாம்புகளைத் திருமேனியில் ஆபரணமாக அணிந்துள்ளவனே! திரிபுரத்தையும், கொடிய அசுரர்களையும், எரித்தழித்துத் திருவிளையாடல் புரிந்தவனே! பிரம்மதேவன் முதலாக அனைத்து தேவர்களையும் ஆட்டி வைக்கின்ற பரம்பொருளே! திருக்காளத்தி வாழும் ஈசனே! எனது உடலிலுள்ள நோயினை நீக்கி, ஆற்றல் குறைந்திடாமல் வைத்திருப்பாயாக.

கூற்ற நமனை யுதைந்தவனேவெங் கொடியபுலித்
தோற்றங் கரையுள்ள சோதியென்னுளைத் தொலைத்தருள்வாய்
போற்று நரையுகந்தாள்பவ னேதெய்வப் பொன்முகரி
யாற்றங் கரையிலமர்ந்தருள் காளத்தி யற்புதனே

உடலையும், உயிரையும் கூறுபடுத்துபவனாகிய எமனை, மார்க்கண்டேயன் பொருட்டு, நினது திருக்காலால் உதைத்தவனே கொடுமைமிக்க புலியின் தோலை இடுப்பிலே ஆடையாக அணிந்தவனே! சோதி வடிவானவனே! நின்புகழ்பாடிப் போற்றும் அடியவரை அன்பால் ஆள்பவனே! தெய்வப் பொன் முகரியாறு ஓடுகின்ற காளத்தியிலே ஆற்றின் கரையில் அமர்ந்தருள்புரியும் அற்புதனே! எனது நோயாகிய துன்பத்தைப் போக்கியருள்வாய்.

வெங்களை மூடி முளைதனில் வாடுமென் மெய்ப்பிணிநீத்
தங்களைத் தேயெனை யாண்டருள் வாய்கொன்றைத் தாரினையும்
திங்க ளையுமர வங்களை யுந்திருத் தார்களையும்
கங்களை யுங்கட்கு செஞ்சடை யாய்திருக் காளத்தியே

கொன்றை மலர் மாலையினையும், நிலவினையும், பாம்புகளையும், திருத்தப் பெற்ற ஆத்திமாலைகளையும், மண்டை ஓடுகளையும் மாலையாகக் கொண்டவனே! சிவந்த சடாமுடியினையுடையவனே! திருக்காளத்தி நாதரே! பயிர் செழிக்க இயலாதபடி தோன்றிக் கெடுக்கும் களையினைப் போல, எனதுடல் செழிக்க இயலாதபடி களையாய் எனதுடலில் தோன்றி வாட்டும் கொடிய நோயினைப் போக்கி என்னை ஆட்கொண்டருள்வாய்.

பல்லாலொர் மாத்தசை மென்றிட்ட வற்குன் பதமளித்தாய்
வில்லா லசுரரைச் செற்ரு யெனது மிடிதொலைப்பாய்
சொல்லா லமரர் துதிக்குங் கயிலைச் சுடர்க்கொழுந்தே
கல்லான் மரத்தி னிழலுறை வாய்திருக் காளத்தியே

கொடிய வில்லால் அசுரர் கூட்டத்தினை அழித்தவனே! பற்களால் கடித்துச் சுவை பார்த்து பன்றி இறைச்சியை நைவேத்தியம் செய்த கண்ணப்ப நாயனாருக்கு சிவலோகப் பதமளித்தவனே! தூய சொற்களால் தேவர்கள் துதித்துப்பாடும் கயிலையம்பதி வாழ் சுடர்க்கொழுந்தே! திருக்காளத்தி மலையிலே, ஆலமரத்தினிழலில் உறைபவனே! எனது நோயாகிய துன்பத்தினைத் தொலைத்தருள்வாய்.

பெரும்புனல் கொன்றை சிறுபிறை சூடிய பிஞ்ஞகனே
இரும்பனைப் பித்தனை யாகாமற் காத்தரு ளேமனென்னும்
துரும்பனைத் தூணி லவதரித் தேசெற்ற சோதிபெற்ற
கரும்பனை வெம்பொடி செய்தவ னேதிருக் காளத்தியே

கங்கையினையும், கொன்றை மலரினையும் பிறைச் சந்திரனையும் சூடிய இறைவனே! துரும்பு போன்ற இரணியனைத் தூணிலே தோன்றி கொன்ற, நரசிங்கமூர்த்தி எனும் சோதி பெற்றெடுத்த, கரும்பு வில்லையுடைய மன்மதனை, சாம்பலாகும்படி நின் நெற்றிக் கண்ணால் எரித்தழித்தவனே! திருக்காளத்தி மலையுறை இறைவனே! இரும்பு போன்ற கடின மனமுடைய எனைச் சிற்றின்பத்தில் மூழ்கி பித்தாகிவிடாமல் காத்தருள்வாயாக

அருமந்த வாலிப மெல்லா நடுங்கவென் ஞகந்தன்னில்
வருமந்த மான பிணிதொலேப் பாய்நச்சு வாயரவம்
தருமந்த மாணிக்க தன்னேக்கை யாலள்ளித் தனகதிராற்
கருமந்தி செம்மந்தி யாகுங் கயிலேயிற் காளத்தியே

நஞ்சினையுடைய பாம்பு உமிழ்ந்த மாணிக்கத்தின் சிவந்த ஒளிக்கதிர்களால் கருமை நிறம் உடைய மந்தி, சிவந்த நிறமுடைய செம்மந்திப் போலத் தோற்றம் தரும் கயிலையிற் திகழும் காளத்தி நாதரே! அமுதம் போன்ற இளமைப் பருவமெல்லாம் வீணாகும்படி எனதுடலில் வரும் மந்தமான பிணியினை, நோயினை நீக்கியருள்வாய்!

நேமியன் றன்னேக் கலேயாக்கி யிந்தை நிலத்தரைத்துந்
தோமிய றக்கன் றலேவெட்டிப் பாரதி துண்டங்கொய்து
மாமிதன் காதை யரிந்தவ னேயென் மனத்துக்கிட்ட
காமியத் தந்தருள் வாய்கயி லாபுரிக் காளத்தியே

சக்ரபாணியாகிய திருமாலின் அம்சமாகிய யாக புருஷனைத் தக்கயாக சங்காரத்தில் மானுருவத் தாங்கி ஓடச் செய்து, தட்சனின் யாகத்தில் சந்திரனைத் தன் திருப்பாதத்தால் தேய்த்து, குற்றமுடைய தட்சனின் தலையை வெட்டி, கலைமகளின் ஆணவத்தைப் போக்கி, தட்சன் மனைவியை விதைத்தவனே! திருக்காளத்தி மலையில் வாழும் ஈசனே! என் மனதுக்கு விருப்பமான பொருள்களைத் தந்தருள்வாய்.

காமத் தளவின் முயல்பஞ்ச பாதகன் கள்வன்செயும்
தோமத் தனேயுமிடியத் தனேயுந் தொலேத்தருள்வாய்
சேமந்தைச் சேர்சடைப் பாகீரதிபொங்கிச் சிந்தச்சிந்த
ஈமத் திருநடஞ் செய்பவ னேயேழிற் காளத்தியே

உயிர்கட்கு பாதுகாப்பு தரும் இறைவனாகிய சிவனின் சடா முடியிலுள்ள கங்கை நீரானது சிதறிப்பாய, சுடலையில் அழகிய தாண்டவத்தைச் செய்பவனே! அழகிய காளத்தியிலுறை இறைவனே! காமநுகர்ச்சிக்குரிய முயற்சிகளை மட்டும் செய்கின்ற பஞ்சமாபாதகனும், கள்வனுமாகிய நான் செய்யும் குற்றங்களையும் எனது வறுமையையும் போக்கி அருள்வாய்.

குலைமதி யென்றுளம் பேணேன் விரகக் கொடுமையிற்பட்
டலைமதி கேட னெனினு மடியனை யாண்டருள்வாய்
விலைமதி யாத கழையீன்ற முத்தம் வெயிலைத்தள்ளிக்
கலைமதி காட்டுங்கயிலாய மாமலைக் காளத்தியே

சூரியனின் வெம்மையைக் குறைக்கும் மூங்கில்கள் உதிர்த்த விலைமதிப்பில்லாத முத்துக்கள் போன்று வெண்ணிறமும், குளிர்ச்சியும் நிறைந்த கலைகளையுடைய சந்திரனைக் காட்டுகின்ற கயிலாய மாமலை வாழும் காளத்தி நாதரே! என் பாவத்தை அழித்திடும்படி வேண்டி உன்னை என் மனதின்கண் வைத்துப் போற்றவில்லை. காமதாபத்தில் சிக்குண்டு அலையும் கெட்டவனாக நான் இருப்பினும் என்னை நீ ஆண்டு அருள வேண்டும்.

புழைக்கை மலைவெங் கராவாயிற் பட்டுப் புராதனவென்
றழைக்கும் பொழுதரி காத்தது போலெனை யஞ்சலென்பாய்
உழைக்கண் பிதுங்கப் புலிதண்ணுட மோத வுறவினர்போல்
கழைக்கண்கள் முத்துதிர்க் குங்கயி லாபுரிக் காளத்தியே

புலிவாலைத் தரையில் மோதிய மாத்திரத்தில் மான்கள் அஞ்சி விழி பிதுங்க, அம்மானின் நிலைகண்டு இரங்கி மூங்கில்கள் முத்துக்களை உதிரும்படிச் செய்யும் தென் கயிலாபுரி எனும் தலத்தில் வாழும் திருக்காளத்தி நாதரே! நீண்ட துதிக்கையினை-யுடைய கசேந்திரன் எனும் யானை, கொடிய முதலையின் வாயில் அகப்பட்டுக் கொண்டபோது, 'ஆதிமூலமே' என்றழைத்திட, அவ்வமயம் ஆதிமூலமாகிய திருமால் வந்து காப்பாற்றியது போல் நோய் கண்டஞ்சும் எனது அச்சத்தை நீ வந்து தவிர்ப்பாய்.

பண்ணிடந் தான்செவி யாகிடப் பாணர்ப் பரித்தவனே
பெண்ணிடந் தான்வைத்த விஞ்ஞகனேயென் பிணிதொலைப்பா
மண்ணிடந் தானயுன் காணுத நின்றன் வடிவையெல்லாம்
கண்ணிடந் தானுக் கிருப்பாக நல்கிய காளத்தியே

பண்கள் தோன்றக் காரணமான இசைவாணர்களைத் தாங்கியவனே! பெண்ணாகிய உமாதேவியை இடப்பாகத்திலே தாங்கிய அழகிய சிவனே! மண்ணைத் தோண்டிய திருமாலால் கூடக் காணமுடியாத திருவடியை உடையவனே! உனது அழகிய உருவத்தை, தனது கண்களை எடுத்தப்பிய கண்ணப்ப நாயனாருக்கு விருப்பத்துடன் காட்டிய காளத்தி இறைவனே! எனது உடல் நோயினை நீக்கியருள்வாயாக.

அல்விளக் குந்திங்க ளங்கமுந் தேயச்செல் லாதவதனுர்
பல்விழக் கண்டவ னேயெனே யாண்டருள் பைந்தொடியார்
இல்விளக் கப்புதுமாலேக்கு நாகங்க ளீன்றுவைத்த
கல்விளக்கேற்றுங் கயிலாய மாமலேக் காளத்தியே

புதுமையுடைய மாலைப் பொழுதில் பெண்கள் முல்லை மலர் தூவி, மணிவிளக்கினைத் தனது கைகளில் ஏந்தி விளக்கேற்றும் போது, நாகங்களீன்ற மாணிக்க விளக்கினை ஏற்றும் சிறப்புடைய கயிலாய மலையுறையும் காளத்திநாதர், இரவை நீக்கி தன் குளிர்ச்சி மிக்கக் கதிர்களால் ஒளிதருகின்ற சந்திரனைத் தக்கயாக சங்காரத்தின்போது தேய்த்து சூரியனின் பல்லைத் தகர்த்தார்.

சிலம்பார்க்கத் தூது நடந்தவ னேயென்றன் சிந்தைவியா
குலம்பாற்றி மெய்யிற் பிணிகளே வாய்பெருங்கோலவெண்ணித்
திலம்பார்த் தெடுத்தரி பற்காட்டுங் கொள்கை சிறுபடிமக்
கலம்பார்ப்ப தொக்குங் கயிலாய மாமலேக் காளத்தியே

அழகிய வெண்ணிற முத்துக்களைக் கண்ட குரங்கு சிறிய கண்ணாடியிலே ஆச்சரியத்துடன் பல்லைத் திறந்து பார்ப்பதை ஒத்திருக்கின்ற கயிலாய மாமலையிலுறையும் திருக்காளத்தி நாதரே! பாதங்களில் சிலம்பாக அணியப்பெற்ற வேதங்கள் ஒலி செய்ய சுந்தரமூர்த்தி நாயனாருக்காகப் பரவை நாச்சியாரிடம் தூது சென்றவனே! எனது மனதின் கண் தோன்றிய துயரத்தினை போக்குவாயாக!

செல்வைத்த புற்றிற் பணிவந்த தென்னமெய் தேம்பச்சொட்டைச்
சொல்வைத் துறையும் பிணிதொலேப் பாய்புனஞ் சூழ்கிளியை
வில்வைத்த நன்னுதல் வேடிச் சியர்கவண் மீதுரத்னக்
கல்வைத்து வீசுங் கயிலாய மாமலேக் காளத்தியே

தினைப் புனங்காக்கும், வில் போன்று வளைந்த நெற்றியினை உடைய வேட்டுவப் பெண்டிர், கவணில் மாணிக்கத்தைக் கல்லாக வைத்து வீசிக் கிளியை ஓட்டுகின்ற செல்வ வளமிக்க தென்கயிலாய மாமலையில் திகழும் திருக்காளத்தியப்பரே! கறையானால் உருவாக்கப்பட்ட புற்றிலே பாம்பு குடிபுகுந்ததைப் போல, உடல் வருத்தமுற பிறரது பழிச்சொல்லுக்கு ஆளாகும்படி எனை வருத்தும் நோயினை நீக்கிடுவாயாக!

நண்டா னதுகட்டும் வானரம் போல நடுங்கியுள்ளம்
திண்டாட வந்தெனைச் சாதிக்கு மெய்ப்பிணி தீர்த்தருள்வாய்
அண்டாத மாலயன் முன்முத லான வமரர்குழாம்
கண்டா தரிக்குங் கயிலாய மாமலைக் காளத்தியே

பிறரால் எளிதில் அணுகமுடியாத திருமால். பிரம்மன் முதலாக தேவர் கூட்டங்களும் கண்டு வணங்கிடும் கயிலாய மாமலையில் வாழ் காளத்தி இறைவனே! நண்டினது இறுக்கமான பிடிக்குள் அகப்பட்ட குரங்கு அஞ்சுவதைப் போல, எனது உள்ளம் தடுமாறும் படியாக வந்து என்னைத் துன்புறுத்துகின்ற எனதுடலில் தோன்றியுள்ள நோயினைத் தீர்த்து அருள்புரிவாயாக!

மிடிக்கே யலுத்து மெலிகின்ற பாதகன் மீண்டுமிந்தக்
கடிக்கே யிளைத்துமெய் நோவாமற் காமின் கனத்தனத்தார்
மடிக்கே கிடத்த வுழல்கின்ற மாயன் வணங்கக்கல்லால்
அடிக்கே யுறைந்த பரனதென் காளத்தியற்புதனே

குழந்தையாக கொண்டு பாலூட்டுவதற்கு மடியின்கண் படுக்க வைக்க. பல தாயார் வயிற்றில் பிறந்து திரிகின்ற திருமாலும் வணங்கும்படி, காளத்தி மலையிலே ஆலமரத்தின் நிழலிலே தோன்றி வாழும் அற்புதங்கள் பல புரிகின்ற காளத்தியப்பரே! வறுமையின் காரணமாக இளைத்து, மெலிகின்ற பாதகச் செயல்களைச் செய்யும் பாவியாகிய நான், மீண்டும் இந்த மேக நோயினால் உடல் இளைத்து துன்பமுறாத வண்ணம் என்னைப் பாதுகாப்பாயாக.

நிரைப்பண் ணளியிசை மேவிய பூங்குழ னேரிழைமா
தரைப்பின் றொடர்ந்து துயர்படு வேனெனைத் தாங்கியருள்
திரைப்பொன்னைத் தாங்கு சடையாய் திருவுந்திப் பொன்முகரிக்
கரைப்புண்ணி யாபர மாகயி லாபுரிக் காளத்தியே

அலைகளையுடைய கங்கையாகிய பெண்ணைத் தலையிலே தாங்கி, அழகிய நதியாகிய பொன்முகரி பாயும் புண்ணிய பூமியான கயிலாபுரியில் வாழ்கின்ற திருக்காளத்தி நாதனே! பரம்பொருளே! வரிசையாகிய பண்களைப் பாடும் வண்டுகள் தங்கி இசைபாடும் மெல்லிய கூந்தலையுடைய, பெண்களைப் பின் தொடர்ந்தால் துன்பப் படுகின்றவனாகிய என்னை நீ பாதுகாத்து அருள்வாயாக!